இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 357 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 22 – வெள்ளிக்கிழமை 07 ஆகஸ்ட் 2026 – சென்னை 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 357 : Thiruvalluvar Year - 2057 - Aadi 22 - Friday 07 August 2026 - Chennai 24 Pages ₹ 5.00

### தமிழ் இனம் – மொழிக்காகத் தன் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்த நவீன சிற்பி

# தமிழினத் தலைவர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் அமைதிப் பேரணி – பல்லாயிரவர் பங்கேற்பு!

**சென்னை, ஆக. 7-**

**தமிழ் இனம், மொழிக்கு தன் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்த தமிழ்நாட்டின் நவீன சிற்பி - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (ஆக.7)! இதனையொட்டி சென்னையில் இன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் அமைதிப் பேரணி நடைபெறுகிறது. இதில் கழகத்தினர் பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்கின்றனர்.**


**மேலும் தமிழ்நாடு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கும், திருவுருவப் படங்களுக்கும் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.**

தமிழ்நாட்டிற்காக, தமிழ் இனத்திற்காக, தமிழ்மொழிக்காக தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த பெருமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு செய்திட்ட திட்டங்கள் ஒன்றா, இரண்டா பட்டியலிட. அவர் தீட்டிய ஒவ்வொரு திட்டமும் தமிழ்நாட்டின் வளத்தை தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே என்றால் அது மிகையல்ல.

தமிழ்மொழிக்கு செம்மொழி அங்கீகாரம் கிடைக்கச் செய்து தமிழ்மொழிக்குப் பெருமைச் சேர்த்த திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் இன்று (ஆக.7)!

**கலைஞர் நினைவிடத்தில் மலரஞ்சலி!**

இந்நினைவு நாளையொட்டி, ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



தகைமைசால் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசனகர்த்தாவாக, இலக்கியவாதியாக, திரைப்படத் தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராகத் தமது பொது வாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளினையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் “அமைதிப் பேரணி”, இன்று (ஆகஸ்ட்7, வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.

இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணியினரும் பங்கேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்கள் தோறும் கழக முன்னோடிகள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், நினைவுப் பேரணிகள் நடத்தியும் மரியாதை செலுத்துகின்றனர்.

---

### அரசின் உதவிக்கரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும்

# டெல்டா உழவர்களுக்கு எதுவுமில்லாத வெற்று பட்ஜெட்!

## வேளாண் நிதிநிலை அறிக்கை குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!

**சென்னை, ஆக.7-**

**“அரசின் உதவிக்கரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் டெல்டா உழவர்களுக்கு எதுவுமில்லாத வெற்று பட்ஜெட்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேளாண் பட்ஜெட் குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**வறட்சி பற்றி பேசாமல், புகழ்ச்சி பாடி முதலமைச்சரின் உச்சிகுளிர பாராட்டுமழை பொழியப் பயன்பட்டதுதான்** TNAgriBudget 2026.

**மற்றுமொரு பெயர்மாற்ற நிகழ்வாக மட்டுமே நடந்து முடிந்துள்ளது.**



**DravidianModel அரசின் திட்டங்களின் மேல் ‘வெற்றி’ என்ற லேபிளை ஒட்டினால் வேலை முடிந்தது என்று இந்த அரசு நினைக்கிறதா?**

**குறுவை சாகுபடி பாதித்து அரசின் உதவிக்கரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் டெல்டா உழவர்களுக்கு எதுவுமில்லாத, வெற்று பட்ஜெட்டாக இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.**

**உழவர் பெருமக்களின் கோரிக்கைகளை உரத்த குரலில் இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் கழக உறுப்பினர்கள் எழுப்புவார்கள். உறக்கத்தில் இருக்கும் அரசு விழித்துக் கொண்டு பதில் சொல்லியாக வேண்டும். தீர்வு கிடைக்க வேண்டும்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

